بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 31

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

முஹர்ரம் 05 - ஹிஜ்ரி கமரி 1443 ★ ஸஃபர் 04 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 04 ஆகஸ்ட் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَحَآجَّہٗ قَوۡمُہٗ ؕ قَالَ اَتُحَآجُّوۡٓنِّیۡ فِی اللّٰہِ وَقَدۡ ہَدٰىنِ ؕ وَلَاۤ اَخَافُ مَا تُشۡرِکُوۡنَ بِہٖۤ اِلَّاۤ اَنۡ یَّشَآءَ رَبِّیۡ شَیۡئًا ؕ

**பொருள் :**

அவருடைய சமுதாயத்தினர் அவருடன் வாதம் செய்தனர். (அப்போது) அல்லாஹ்வே எனக்கு நேரான வழியைக் காட்டியிருக்கும்போது நீங்கள் அவனைக் குறித்து என்னுடன் வாதிக்கின்றீர்களா? என்று அவர் கூறினார்.

(அல் அன்ஆம்:81)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும். அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நாவைப் பேண வேண்டும் என்றும் பொருளற்ற, வீணான, பொருத்தமற்ற, தேவையற்ற பேச்சுகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் இறைவன் போதனை நல்கியுள்ளான்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

உண்மையான இறையச்சமின்றி எந்த நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்கவே முடியாது என்று இந்த அனைத்து விஷயங்களிலிருந்து தெரிய வருகின்றது. எனவே சிலந்திவலைகளைப் போன்று பரவியுள்ள தக்வாவின் பல்வேறு துறைகளை அறிந்து கொள்ள வேண்டும். தக்வா (இறையச்சம்) என்பது மனிதனின் அனைத்து ஆன்மாக்களுடனும், கொள்கையுடனும், நாவுடனும், ஒழுக்கம் போன்றவற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. மிகவும் நுட்பமான விவகாரம் நாவுடன் தொடர்பு கொண்டுள்ளது. சிலநேரம் (மனிதன்) தக்வாவை விலக்கிவிட்டு ஒரு விஷயத்தை பேசுகிறான். மேலும், நான் இவ்வாறு பேசிவிட்டேன். அவ்வாறு பேசிவிட்டேன் என்று உள்ளத்தில் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால், அந்த விஷயம் தீயதாக இருக்கின்றது. எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அதாவது, ஓர் உலகவாதி ஓர் இறையடியாருக்கு விருந்தளித்தார்.

இறை அடியார் விருந்து உண்பதற்காக வருகை தந்தார். அந்த தற்பெருமை கொண்ட அந்த உலகவாதி தன்னுடைய வேலைக்காரரிடம் நான் முதல் ஹஜ் செய்தபோது வாங்கி வந்த தட்டை எடுத்து வா என்று கூறினான். பின்னர், இரண்டாவது முறை நான் ஹஜ் செய்தபோது வாங்கி வந்த அந்த தட்டை எடுத்து வா என்று மீண்டும் கூறினான். அடுத்து, மூன்றாவது ஹஜ் ஜின் போது வாங்கிய தட்டையும் எடுத்து வா என்று மீண்டும் கூறினான். அப்போது அந்த இறையடியார் கூறினார்: நீர் மிகவும் பரிதாபத்திற்குரியர் ஆவீர். இந்த மூன்று வாக்கியங்களில் நீ உனது மூன்று ஹஜ்ஜுகளையும் நாசமாக்கிவிட்டாய். நீ மூன்று முறை ஹஜ் செய்துள்ளாய் என்பதை வெளிப்படுத்துவதே உமது இந்த கூற்றின் பொருளாக இருந்தது.

எனவேதான், நாவைப் பேண வேண்டும் என்றும் பொருளற்ற, வீணான, பொருத்தமற்ற, தேவையற்ற பேச்சுகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் இறைவன் போதனை நல்கியுள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 381-காதியான் பதிப்பு 2018)

## நபிமொழி

### அமைப்பின் செல்வத்திலிருந்து வணிகம்

**(2070)** ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது அன்னார் (ரலி) கூறினார்கள். எனது தொழிலிருந்து எனது குடும்பத்தினரின் உணவுத் தேவையை என்னால் ஏற்பாடு செய்ய முடியாது என்பதை எனது சமுதாயம் அறியும். ஆனால் நான் தற்போது முஸ்லிம்களின் பணிகளில் மும்முரமாகிவிட்டேன். எனவே இனி, அபூபக்ர் அவர்களின் குடும்பத்தினர் பைத்துல் மாலிலிருந்து உண்பார்கள். மேலும் அவர் (அதாவது, அபூபக்ர்(ரலி)) முஸ்லிம்களுக்காக இந்த செல்வத்திலிருந்து வணிகம் செய்வார். (வணிகம் மூலமாக அவர்களது செல்வம் அதிகரித்துக் கொண்டே செல்லும்.) (ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, பாடம் வியாபாரம் காதியான் பதிப்பு 2008)

## மறுமை நாளன்று அனைத்து சமுதாயங்களின் நபிமார்களும் முன்னால் கொண்டு வரப்படுவார்கள். மேலும் தமது சமுதாயத்தைக் குறித்து சாட்சியம் வழங்குவார்கள்.

وَیَوۡمَ نَبۡعَثُ مِنۡ کُلِّ اُمَّۃٍ شَہِیۡدًا ثُمَّ لَا یُؤۡذَنُ لِلَّذِیۡنَ کَفَرُوۡا وَلَا ہُمۡ یُسۡتَعۡتَبُوۡنَ

( அந்நஹ்ல் : 85 )

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள் :

அந்த மாபெரும் குற்றத்தைக் குறிப்பிட்டப் பிறகு, பின்னர் மறுஉலக வாழ்வைக் குறித்து இறைவன் கூறியுள்ளான். அதாவது, இவ்வுலகில் அந்த குற்றத்திற்கான தண்டனை கிடைத்தே தீரும். ஆனால், மறுமையில் இன்னும் அதிகமான தண்டனை பெறுவார்கள். மேலும் அந்த தண்டனையும், இழிவும் மிகவும் கடினமானதாக இருக்கும். ஏனென்றால், பூமியில் எந்தக் காலத்தில் மனிதர்களின் உடல்கள் இருந்திருந்தாலும் சரியே! அவர்கள் அனைவரின் ஆன்மாக்களும் ஒன்றுகூட்டப்படும். ஒவ்வொரு சமுதாயத்தின் நபியும் முன்னால் கொண்டுவரப்படுவார். மேலும் தமது சமுதாயம் குறித்து சாட்சியம் வழங்குவார். அவ்வாறிருக்க, அந்நேரத்தில் அவர்களுக்கு கிடைக்க இருக்கும் இழிவைக் குறித்து அந்த மக்கள் ஏன் கவலை கொள்வதில்லை?

فَکَیۡفَ اِذَا جِئۡنَا مِنۡ کُلِّ اُمَّۃٍۭ بِشَہِیۡدٍ وَّجِئۡنَا بِکَ عَلٰی ہٰۤؤُلَآءِ شَہِیۡدًا یَوۡمَئِذٍ یَّوَدُّ الَّذِیۡنَ کَفَرُوۡا وَعَصَوُا الرَّسُوۡلَ لَوۡ تُسَوّٰی بِہِمُ الۡاَرۡضُ

( அந்நிஸா : 42 )

கியாமத் நாளன்று நபிமார்கள் சாட்சி வழங்குபவர்களாக நிறுத்தப்படுவார்கள் என்று இங்கு அல்லாஹ் கூறியுள்ளான். என்னைப் பொருத்தவரை நபிமார்களின் சாட்சியம் என்பதன் பொருள் அவர்களின் முன்மாதிரிகளாகும். இறைவேதம் எங்களிடம் இந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த போதனையை ஏற்றுக் கொண்டதன் விளைவு எங்களுக்கு இறைவன் கிடைத்துவிட்டான் என்று அவர்கள் தமது முன்மாதிரிகளை எடுத்துவைப்பார்கள். அப்போது, பாருங்கள். எமது வேதத்தின் அற்புதத்திலிருந்து ஆன்மீக ஆற்றல் பெற்று எமது இந்த நபி இந்த சிறப்பை அடைந்துள்ளார். ஆனால், (நிராகரிப்பாளர்களாகிய) நீங்கள் எமது வேதத்தை நிராகரித்து எவ்வாறு வீழ்ச்சி அடைந்து கிடக்கின்றீர்கள்! என்று கூறி நிராகரிப்பாளர்களை வெட்கத்திக்குள்ளாக்கிவிடுவான்.

ஒவ்வொரு நபியும் இறை வேதத்தின் விளைவிற்கான செயல் முன்மாதிரியாக இருக்கின்றார். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 214 காதியான் பதிப்பு 2014)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

அல்லாஹ் உங்களுக்காக கிளர்ச்சியாளர்களின் கூட்டங்களை ஒன்று திரட்டி விட்டான். போரைக் கடலுக்குள் தள்ளி விட்டான். அவன் முதலில் உங்களுக்கு நிலத்தில் தனது அடையாளங்களை வைத்துள்ளான். நீங்கள் கடலிலும் பாடம் கற்கும் பொருட்டு அந்த அடையாளங்களை காட்டியுள்ளான். உங்களது எதிரியை நோக்கிச் செல்லுங்கள். கடலைக் கிழித்தவாறு அவர்கள் பக்கம் முதலில் முன்னேறுங்கள். ஏனெனில், அல்லாஹ் அவர்களை உங்களுக்காக ஒன்று திரட்டியுள்ளான். (ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி))

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 ஜூலை 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **01ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் முர்தத்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட போர்ப் படைகள் பற்றிக் கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாக பஹ்ரைனுக்கு அனுப்பப்பட்ட ஒன்பதாவது போர்ப்படை பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இது சம்பந்தமான மேற்கொண்ட விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது.

அது ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்கள் ஹதம் மீது படையெடுத்தது பற்றியதாகும். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஜாரூத் (ரலி) அவர்களுக்கு, நீங்கள் அப்துல் கைஸ் கோத்திரத்தை அழைத்துக் கொண்டு ஹதமோடு போரிடுவதற்காக, ஹஜரோடு இணைந்துள்ள பகுதிக்குச் சென்று அங்கு முகாமிடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் தமது படையுடன் ஹதமோடு போரிட அந்தப் பகுதிக்கு வந்தார்கள். தாரைன் வாசிகள் தவிர, எல்லா இணைவைப்பாளர்களும் ஹதமிடம் ஒன்றிணைந்துவிட்டார்கள். இவ்வாறு, எல்லா முஸ்லிம்களும் ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்களிடம் ஒன்றிணைந்துவிட்டார்கள். இருவரும் தமக்கு முன்னால் அகழிகளைத் தோண்டிக் கொண்டார்கள்.

தினமும் அவர்கள் அகழியைத் தாண்டி எதிரி மீது தாக்குதல் தொடுப்பார்கள். போருக்குப் பிறகு, அகழிக்குப் பின்னால் தள்ளி வந்துவிடுவார்கள். போரின் நிலை ஒரு மாதம் வரை இப்படியே இருந்து வந்தது. இதற்கு இடையிலேயே ஓர் இரவு முஸ்லிம்களுக்கு எதிரிகளின் தங்குமிடத்திலிருந்து பயங்கரமான கூப்பாடு கேட்டது. ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்கள், யாராவது சென்று எதிரியின் அசல் நிலையைப் பற்றி செய்தி அறிந்து வருவாரா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹஸஃப் (ரலி) அவர்கள், நான் இந்தப் பணிக்காக செல்கிறேன் என்று கூறினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் திரும்பி வந்து, நமது எதிரிகள் போதையில் திளைத்திருக்கிறார்கள். போதை மயக்கத்தில் பிதற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதுதான் கூப்பாடு எல்லாம், என்று தகவல் கொடுத்தார்கள். இதைக் கேட்டதும் முஸ்லிம்கள் உடனடியாக எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். அவர்களது முகாமிற்குள் நுழைந்து தயக்கமின்றி அவர்களை மரணத்தின் குழிக்குள் இறக்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் தங்களது அகழிகளின் பக்கம் ஓடிச் சென்றுவிட்டனர். பலர் அதில் விழுந்து அழிந்துவிட்டனர். பலர் தப்பி விட்டனர். பலர் பயந்துபோயினர். சிலர் கொல்லப்பட்டனர் அல்லது சிறைபிடிக்கப் பட்டனர். முஸ்லிம்கள் அவர்களது முகாமிலிருந்து எல்லா பொருள்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். எந்த நபரால் தப்பி ஓட முடிந்ததோ அவரால் தமது உடலில் இருந்த பொருளை மட்டுமே எடுத்து செல்ல முடிந்தது. ஆயினும் அப்ஜர் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவிட்டான். அச்சம் மற்றும் திகில் காரணமாக, ஹதமின் நிலை அவனது உடலில் உயிரே இல்லாதது போன்று இருந்தது.

அவன் தனது குதிரையை நோக்கி ஓடினான். ஆனால், முஸ்லிம்களோ இணைவைப்பாளர்களுக்கு நடுவில் வந்துவிட்டிருந்தார்கள். திகிலடைந்த ஹதமும் முஸ்லிம்களிடமிருந்து தப்பி ஓடி தனது குதிரையில் பயணிப்பதற்காக செல்வதற்கு முற்பட்டான். அவன், குதிரை ஏறும் படித்தட்டில் காலை வைத்ததுமே படித்தட்டு உடைந்துவிட்டது. ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்கள் அவனை நரகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இணைவைப்பாளர்களின் தங்குமிடத்திலிருந்து எல்லாப் பொருள்களையும் கைப்பற்றிய பிறகு, முஸ்லிம்கள் அவர்கள் வெட்டி வைத்திருந்த அகழிகளைத் தாண்டி அவர்களை விரட்டிச் சென்றார்கள்.

ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்கள் அப்ஜருக்கு அருகில் சென்று சேர்ந்துவிட்டார்கள். ஆனால், அப்ஜருடைய குதிரை ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களின் குதிரையை விட அதிகம் சக்திவாய்ந்ததாக இருந்தது. அவர்கள் இவன் ஒருவேளை எனது பிடியிலிருந்து தப்பிவிடுவானோ என்று அஞ்சி, அப்ஜருடைய குதிரையின் முதுகில் ஈட்டி எறிந்தார்கள். அதனால், குதிரை காயம் அடைந்தது. எவ்வாறு இருப்பினும், அப்ஜர் தப்பி ஓடிவிட்டான் என்றும் அவர்களின் பிடியில் சிக்கவில்லை என்றும் எழுதப்பட்டுள்ளது. ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்கள் அப்ஜரின் தலையில் வாள் வீசினார்கள். அது அவனது கவசத்தை கிழித்தவாறு சென்றுவிட்டது. அதற்குப் பிறகு, ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் மீண்டும் அதேபோன்று வாள் வீசினார்கள். அவன் இரத்தத்தில் மிதக்க ஆரம்பித்தான்.

காலையில் ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை போர் வீரர்களுக்குப் பகிர்ந்தளித்து விட்டார்கள்.

குறிப்பாக, போரில் திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு மரணித்த தலைவர்களின் விலையுயர்ந்த ஆடைகளையும் வழங்கினார்கள். அவர்களில் ஹஸ்ரத் அஃபீஃப் பின் முன்ஸிர், ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம், ஹஸ்ரத் ஸமாமா பின் அஸால் ஆகியோருக்கும் ஆடைகள் வழங்கப்பட்டன.

ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆடைகளில் ஹதமுடைய விலையுயர்ந்த, வேலைப்பாடு மிக்க, கருப்பு நிற மேலங்கி ஒன்று இருந்தது. அதை அணிந்து கொண்டு அவன் மிகவும் கர்வத்தோடும், ஆணவத்தோடும் திரிந்து வந்தான். அந்தப் போர்படையின் வெற்றியின் தகவல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் தமது ஒரு கடிதத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அகழ் தோண்டியவர்களின் தோல்வி மற்றும் ஹதம் கொல்லப்பட்டது பற்றி தகவல் கொடுத்தார்கள். (அவனை ஸைதும், மஃமரும் கொன்றார்கள்.) அதில் இவ்வாறு எழுதியிருந்தார்கள்.

அம்மா பஃது. எல்லாம் வல்ல அருளுக்குரிய அல்லாஹ் நமது எதிரிகளின் அறிவுகளைப் பறித்து விட்டான். அவர்கள் பகலில் அருந்திய அந்த மதுவின் மூலமாக அவர்களின் ஆற்றலை இல்லாமற் செய்துவிட்டான். நாங்கள் அகழியைத் தாண்டி அவர்களுக்குள் நுழைந்து விட்டோம். நாங்கள் அவர்கள் மதுபோதையில் இருப்பதைக் கண்டோம். ஓரிருவர் தவிர, ஏனைய அனைவரையும் நாங்கள் கொன்றுவிட்டோம். அல்லாஹ் ஹதமையும் அழித்துவிட்டான். ஹஜரையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் கைப்பற்றிவிட்டார்கள். ஆனால், உள்ளூர் பாரசீகர்கள் பலர் புதிய அரசாங்கத்துக்கு எதிராக இருந்தார்கள்.

மஃப்ரூக் ஷீபானீ தனது சமுதாயங்களான தஃக்லப் மற்றும் நம்ரின் படைகளை அழைத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றான். ஹஜரில் மதீனாவின் ஆளுமை கவிழும் நேரம் நெருங்குகிறது என்ற செய்தியைப் பரப்பி பெரும்பாலும் அவர்கள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரிய வந்தபோது, அன்னார் ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள். மஃப்ரூகைத் தலைவனாகக் கொண்ட ஷஃபான் பின் ஸஃபா கோத்திரத்தினர் உங்கள் மீது தாக்குதல் தொடுக்க இருக்கிறார்கள் என்பதும் தீமையை விரும்பும் விஷமிகள் இந்தச் செய்தியைப் பரப்புகிறார்கள் என்பதும் ஆய்வின் மூலம் உங்களுக்குத் தெரிந்துவிட்டால், அவர்களைத் தண்டிப்பதற்காகப் படையை அனுப்புங்கள். அவர்களை நசுக்கி விடுங்கள். அவர்களுக்குப் பின்னால் இருக்கும் கோத்திரங்களை நீங்கள் எந்த அளவுக்கு அச்சுறுத்தி விட வேண்டும் என்றால், அவர்களுக்கு ஒருபோதும் தலை தூக்க துணிச்சல் இருக்கக் கூடாது.

முர்தத்கள் தாரைனில் ஒன்றிணைந்துவிட்டார்கள். இது சம்பந்தமாக சில வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளார்கள். தரைன் போர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், சில வரலாற்றிசிரியர்கள் தாரைன் போர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நடந்ததாக எழுதியுள்ளார்கள். எவ்வாறு இருப்பினும், இந்த இடத்தில் முர்தத்கள் ஒன்று கூடினர். தாரைன் பாரசீக வளைகுடாவின் ஒரு தீவாக இருந்தது. பஹ்ரைனோடு ஒப்பிடுகையில், அது சில மைல்கள் தொலைவில் உள்ளது. அங்கு ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்துவ குடும்பங்கள் வசித்திருந்தன. ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களிடம் தோற்றுப் போன பிறகு, தோற்றுப் போனவர்களில் உயிர் தப்பிய கிளர்ச்சியாளர்களின் ஒரு பெரும் பகுதி கப்பல்களில் அமர்ந்து தாரைன் சென்றுவிட்டது. ஏனைய மக்கள் தத்தமது கோத்திரங்களின் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்கள் பக்ர் பின் வாயில் கோத்திரத்தில், இஸ்லாத்தில் நிலைத்திருந்த மக்களுக்கு அவர்களை எதிர்த்துப் போரிடுமாறு எழுதினார்கள். ஹஸ்ரத் அதீபா பின் நஹாஸ் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் அப்தில் அஸ்வத் ஆகியோருக்கு, நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருங்கள். எல்லா வழிகளிலும் முர்தத்களை எதிர்கொள்வதற்காக காவல் அமர்த்தி விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் மஸ்மா (ரலி) அவர்களுக்கு அவர்களே முன்னோக்கிச் சென்று முர்தத்களோடு போரிடுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் கஸ்ஃபா தைமீ மற்றும் முஸன்னா பின் ஹாரிஸா ஷீபானீ ஆகியோருக்கு அந்த முர்தத்களோடு போர் புரியுமாறு அவர்கள் கட்டளையிட்டார்கள்.

பஹ்ரைனில் முர்தத் ஆகும் குழப்பம் எனும் நெருப்பை அணைப்பதில் முஸன்னா பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் பெரும் பங்களித்தார்கள். அவர்கள் தமது படையுடன் ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள். பிறகு, பஹ்ரைனிலிருந்து வடக்கை நோக்கி பயணமானார்கள். அவர்கள் கதீஃப் மற்றும் ஹஜரைக் கைப்பற்றினார்கள். தமது இந்த மிஷனிலேயே ஈடுபட்டிருந்தார்கள். எதுவரை என்றால், பஹ்ரைனின் முர்தத்களுக்கு உதவி புரிந்த பாரசீக படைகளையும் அவர்களது அதிகாரிகளையும் வெற்றி கண்டார்கள்.

முர்தத்களோடு போர் புரிவதற்காக அந்தப் பகுதிகளில் இஸ்லாத்தில் நிலைத்து நின்ற மக்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். கரையோரமாக வடக்கு திசையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கைஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்களிடம், அவர்கள் அறியப்படாத, வம்சம் தெரிந்திராத, ஒழுக்கமற்ற மனிதர் ஒன்றும் அல்ல. அவர்கள் முஸன்னா பின் ஹாரிஸா ஷீபானீ ஆவார்கள் என்று கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் முஸன்னா பின் ஹாரிஸா ஷீபானீ (ரலி) அவர்கள் முர்தத்களைத் தடுத்து நிறுத்துவதற்காக வழியின் எல்லைகளில் நின்றார்கள். முர்தத்களில் சிலர் தவ்பா செய்து இஸ்லாத்தை ஏற்றனர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிலர் தவ்பா செய்ய மறுத்து முர்தத் ஆக இருப்பதில் திடமாக இருந்தனர். அவர்கள் தமது பகுதியில் செல்வதை விட்டும் தடுக்கப்பட்டனர். எனவே, அவர்கள் வந்த வழியாகவே திரும்பிச் சென்றனர். எதுவரை என்றால், அவர்களும் கப்பல்கள் வாயிலாக தாரைன் சென்றடைந்தனர். இவ்வாறு அவர்கள் அனைவரையும் அல்லாஹ் ஓரிடத்தில் ஒன்று திரட்டிவிட்டான்.

ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் இணைவைப்பாளர்களின் படைகளிடத்திலேயே தங்கியிருக்கையில், அந்தக் கடிதங்களுக்கு பதில்கள் வந்துவிட்டன. அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி செயல்படுவார்கள் என்பதும்

அவர்களுக்குத் தேவையான உதவியை செய்வார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களுக்கு அந்த மக்கள் தொடர்பாக அவர்கள் எண்ணியது போன்றே, அதாவது அவர்கள் முஸ்லிம்கள் ஆவர். கிளர்ச்சி செய்யவில்லை. போர் புரிய மாட்டார்கள் என்ற செய்தி கிடைத்ததும், மேலும் அவர்கள் சென்ற பிறகு, பின்னால் பஹ்ரைன் வாசிகளில் யாருக்கும் துன்பம் தரும் எந்த சம்பவமும் ஏற்படாது என்று உறுதி ஆன பிறகு, இப்போது எல்லா முஸ்லிம்களும் தாரைனை நோக்கி செல்ல வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தாரைனுக்கு முதலில் செல்லுமாறு அழைப்பு விடுத்தார்கள். இந்த சம்பவத்தின் விளக்கம் பிறகு வரும். இந்த சம்பவம் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அதை வெளிப்படையாகப் பார்க்கும் போது சாத்தியமற்றதாக தென்படுகிறது. அதாவது, எவ்வாறு அவர்கள் கடலைக் கடந்தார்கள் என்பது தொடர்பாக ஓரளவு உண்மையும் இருக்கலாம். சிறிது மிகைப்படுத்தியும் கூறப்பட்டிருக்கலாம். எவ்வாறு இருப்பினும், அதில் ஏதாவது உண்மை இருக்கிறது என்றால் அதன் விளக்கம் என்ன?

அதற்கான விளக்கத்தைக் கடைசியில் எடுத்துரைத்து விடுவேன். எவ்வாறு இருப்பினும் கூறப்படுகிறது: முஸ்லிம்களிடம், தாம் பயணம் செய்து தீவு வரை செல்வதற்குக் கப்பல்கள் ஏதும் இருக்கவில்லை. இதைப் பார்த்து, ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு முன்பு சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் உங்களுக்காக கிளர்ச்சியாளர்களின் கூட்டங்களை ஒன்று திரட்டி விட்டான். போரைக் கடலுக்குள் தள்ளி விட்டான். அவன் முதலில் உங்களுக்கு நிலத்தில் தனது அடையாளங்களை வைத்துள்ளான்.

நீங்கள் கடலிலும் பாடம் கற்கும் பொருட்டு அந்த அடையாளங்களை காட்டியுள்ளான். உங்களது எதிரியை நோக்கிச் செல்லுங்கள். கடலைக் கிழித்தவாறு அவர்கள் பக்கம் முதலில் முன்னேறுங்கள். ஏனெனில், அல்லாஹ் அவர்களை உங்களுக்காக ஒன்று திரட்டியுள்ளான். அவர்கள் அனைவரும் இவ்வாறு பதில் அளித்தார்கள்:

இறைவன் மீது ஆணையாக! நாங்கள் அவ்வாறே செய்வோம். தஹ்னா பள்ளத்தாக்கின் அற்புதத்தைக் கண்ட பிறகு,நாங்கள் உயிருடன் இருக்கும் வரை அவர்களைக் கண்டு அஞ்சமாட்டோம். தபரீயில் இந்த அறிவிப்பு உள்ளது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அந்த அற்புதத்தில், முஸ்லிம்களின் ஓடிப்போன ஒட்டகங்களும் திரும்பி வந்திருந்தன. நீருற்றும் பெருக்கெடுத்தது. அந்த அற்புதம் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது. அதைப் பற்றி அவர்கள் கூறினார்கள்: அந்த அற்புதத்தை நாங்கள் பார்த்திருக்கின்றோம். ஆக, கடல் நீரில் நடப்பதற்கான அற்புதத்தையும் நாங்கள் காண்போம். ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் இறைவனிடம் இவ்வாறு துஆசெய்து கொண்டிருந்தார்கள்.

يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ يَا كَرِيْمُ يَا حَلِيْمُ
يَا اَحَدُ يَا صَمَدُ يَا حَيُّ يَا مُحْيِيَ الْمَوْتِ يَا حَيُّ
يَا قَيُّوْمُ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ يَا رَبَّنَا

பொருள்: கருணை காட்டுபவர்களில் எல்லாரையும் விட அதிகம் கருணை காட்டுபவனே! தயாளனே! அதிகம் பொறுத்துக் கொள்பவனே! தனித்தவனே தேவையற்றவனே! உயிரோடு இருப்பவனே! மற்றவர்களுக்கு வாழ்வளிப்பவனே! நிலைத்திருப்பவனே! மற்றவர்களை நிலைத்திருக்கச் செய்பவனே! எங்கள் இறைவா! உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை.

எவ்வாறு இருப்பினும், கூறப்படுகிறது: ஹஸ்ரத் அலாஃ (ரலி) அவர்கள் படையின் மக்கள் அனைவருக்கும் இந்த துஆவை செய்தவாறு கடலில் தமது பயண விலங்குகளை செலுத்துமாறு கூறினார்கள்: ஆக, முஸ்லிம்கள் அனைவரும் தமது படைத் தளபதியான ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்களைப் பின்பற்றிய வண்ணம் அவர்களுக்குப் பின்னால் தமது குதிரைகள், கழுதைகள், ஒட்டகங்கள் மற்றும் கோவேரி கழுதைகள் மீது பயணித்தார்கள். அவற்றைக் கடலில் செலுத்திவிட்டார்கள். பிறகு, அல்லாஹ்வின் வல்லமை! எவ்வித இழப்பும் இன்றி அந்த வளைகுடாவைக் கடந்துவிட்டார்கள். அது தண்ணீர் தெளிக்கப்பட்ட மென்மையான மணலைப் போன்றும் அதன் மீது நடப்பதைப் போன்றும் இருந்தது. ஒட்டகங்களின் கால்கள் கூட மூழ்கவில்லை. முஸ்லிம்களின் எந்தப் பொருளும் கடலில் தொலையவில்லை.

பொருட்களை வைக்கும் ஒரு சிறு பை மட்டும் தொலைந்துபோனதாகக் கூறப்படுகிறது. அதைக் கூட ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் தேடி எடுத்துவந்தார்கள். எவ்வாறு இருப்பினும், கரையிலிருந்து தாரைன் வரைச் சென்ற பயணம் எடுத்துரைக்கப்படுகிறது:

அது கப்பல்களைக் கொண்டு ஒரு பகல் மற்றும் ஓர் இரவில் கடக்கப்பட்டு வந்தது. ஆனால், அந்தக் குழு ஒரு பகலின் மிகவும் குறைந்த நேரத்திலேயே இந்தப் பயணத் தொலைவைக் கடந்துவிட்டது. இதன் விளக்கம் தபரீ வரலாற்று நூலில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது;

ஆனால், இன்றைய காலத்து எழுத்தாளர்கள் சிலர் கடலைக் கடந்த அந்த சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அதற்கு விளக்கமும் எழுதுகிறார்கள். கூறுகிறார்கள்.

அப்போது பாரசீக வளைகுடாவில் கடல் உள் வாங்கியிருக்கலாம் அல்லது அறிவிப்பில் மிகைப்படுத்துதல் இருக்கலாம். உண்மையில் முஸ்லிம்களுக்கு உள்ளூர் வாசிகள் மூலமாகக் கப்பல்கள் கிடைத்திருக்கலாம். அவற்றின் மீது பயணித்து அவர்கள் கடலைக் கடந்திருக்கலாம். ஆனால், முஸ்லிம்கள் பஹ்ரைன் சென்றடைந்துவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை. எப்படி சென்றடைந்தார்கள் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

மற்றப்படி, அற்புதங்களைப் பொறுத்தவரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஓர் விளக்கவுரையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு அடிப்படை வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள். அதை எடுத்துரைத்துவிடுகிறேன்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஹிஜ்ரத் செய்தபோது நிகழ்ந்த கடல் பிளந்த சம்பவத்துக்கு விளக்கவுரை வழங்கி அதனை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓர் இடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் இந்த சம்பவம் வந்துள்ளது. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் கூறுவதற்கு ஏற்ப சம்பவத்தின் தன்மை இவ்வாறு தெரிய வருகிறது. அதாவது, இஸ்ரவேலர்கள் அர்ஸே முகத்தஸ் செல்வதற்காக நடந்து

கொண்டிருந்தார்கள். பின்னாலிருந்து ஃபிர்அவ்னின் படை வந்தடைந்தது. அதைப் பார்த்த இஸ்ரவேலர்கள் பதற்றமடைந்து, இப்போது பிடிக்கப்படுவோம் என்று நினைத்தனர். ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மூலமாக அவர்களுக்கு ஆற்றல் அளித்தான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் தமது தடியைக் கடலில் அடிக்குமாறு கூறினான். அதன் விளைவாக கடலில் ஒரு வழி உருவாகிவிட்டது. அதன் வழியாக அவர்கள் முன்னோக்கிச் பயணமானார்கள்.

அவர்களுக்கு இருபுறமும் தண்ணீர் இருந்தது. அது மணல் குன்றுகளைப் போன்று, அதாவது உயரமாகத் தென்பட்டது. ஃபிர்அவ்னின் படை அவர்களைப் பின் தொடர்ந்தது. ஆனால், இஸ்ரவேலர்கள் பாதுகாப்பாக கடந்து சென்ற பிறகு, மீண்டும் தண்ணீர் திரும்பியது. எகிப்தியர்கள் மூழ்கிப்போனார்கள். அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்:

இப்போது இந்த சம்பவத்தைப் புரிவதற்கு ஒரு விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் போதனைப்படி எல்லா அற்புதங்களும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வருகின்றன. எந்த மனிதனின் தலையீடும், ஆதிக்கமும் அதில் இருக்காது. ஆகவே, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தடியை ஓங்கியதும் கடலில் அடித்ததும் ஓர் அடையாளத்திற்காக மட்டுமே இருந்தது. அது அல்லாமல், கடல் உள்வாங்கியதில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இந்தத் தடிக்கு எந்தத் தலையீடும் கிடையாது.

இவ்வாறே இதையும் நினைவிற்கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் சொற்களில் இருந்து கடல் இரண்டு துண்டுகளாகப் பிரிந்ததாகவும் அதன் வழியாக ஹஸ்ரத மூஸா (அலை) அவர்கள் கடந்து சென்றுவிட்டதாகவும் ஒருபோதும் நிரூபணமாகவில்லை. இன்னும் கூறப்போனால், இந்த சம்பவம் பற்றித் திருக்குர்ஆனில், இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒன்று, ஃபரக்க மற்றொன்று இன்ஃபலக்க. அவற்றின் பொருள் விலக்கிவிடுவதாகும்.

ஆக, நெப்போலியனின் வாழ்க்கை வரலாற்றிலும் எழுதப்பட்டுள்ளது:

அவன் எகிப்து மீது தாக்குதல் நடத்தியபோது, அவனும் தனது படையின் ஒரு பகுதியோடு செந்நதியின் கரையோரமாக கடல் உள்வாங்கியபோது கடந்து சென்றான். அவன் கடப்பதற்குள் அலை மேலோங்கும் நேரம் வந்துவிட்டது. மிகவும் சிரமப்பட்டு தப்பித்தான். இந்த சம்பவத்தில் அதாவது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சம்பவத்தில் நிகழ்ந்த அற்புதம் என்னவெனில், அல்லாஹ் இஸ்ரவேலர்களை கடல் உள்வாங்கும் நேரத்தில் கடலுக்கு கொண்டு சேர்த்தான்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கையை உயர்த்தியதுமே அல்லாஹ்வின் கட்டளைக்குக் இணங்க தண்ணீர் பின்வாங்க ஆரம்பித்தது. ஆனால், ஃபிர்அவ்னின் படை கடலில் இறங்கியபோது, எத்தகைய அசாதாரண தடைகள் அவனது வழியில் இடைப்பட்டன என்றால், அவனது படை மிகவும் மந்தமான வேகத்தில் இஸ்ரவேலர்களுக்குப் பின்னால் சென்றது. அது கடலில் இருக்கும் போதே அலை பொங்கி வந்துவிட்டது.

கடலில் உள்வாங்குதலும் அலை மேலோங்குதலும் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கும். ஒரு நேரத்தில், தண்ணீர் கரையிலிருந்து வெகு தூரம் பின்னால் சென்றுவிடும். ஒரு நேரத்தில் நிலப்பகுதிக்கு இன்னும் முன்னுக்கு வந்துவிடும். கடல் பிளந்த சம்பவம் இதே அலைகளின் ஏற்ற இறக்கத்துடன் தொடர்புடையது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கடல் உள்வாங்கும் நேரத்தில் கடல் வழியாக கடந்து சென்றுவிட்டார்கள். கடல் பின்வாங்கியிருந்தது. அதன் பிறகு,ஃபிர்அவ்ன் வந்தடைந்தான். அவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் சென்றதிலிருந்து குறைந்தது ஒரு நாளுக்குப் பிறகு சென்றான்.

அவன் கொலைகளை செய்தவாறு கடலை வந்தடைந்த அந்த நேரத்தில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தாம் கடந்து சென்று கொண்டிருந்த அந்தக் கடலின் காய்ந்த பகுதியின் பெரும் பகுதியினைக் கடந்துவிட்டிருந்தார்கள். அவர்கள் கடந்து செல்வதைப் பார்த்த ஃபிர்அவ்ன் உடனடியாக அதில் தனது ரதங்களை செலுத்திவிட்டான். ஆனால், ஈரமாக இருந்த கடல் மணல் அவனது ரதங்களை அழிப்பதற்கு காரணமாக அமைந்தது. அவனது ரதங்கள் அதில் புதைய ஆரம்பித்தன.

எவ்வளவு தாமதமாகிவிட்டது என்றால், அலை எழும்பும் நேரம் வந்துவிட்டது. தண்ணீர் முன்நோக்கி வர ஆரம்பித்தது. இப்போது அவனுக்கு இரண்டு விஷயங்களுமே சிரமமாக இருந்தன. அவனால் முன்நோக்கியும் செல்ல முடியாமல், பின்னாலும் வர முடியாமல் இருந்தது. விளைவு, கடல் அவனை சூழ்ந்து கொண்டது. அவனும் அவனது பல கூட்டாளிகளும் கடலில் மூழ்கிவிட்டனர். அலை வீசும் நேரமாக இருந்ததால் கரையை நோக்கி பாய்ந்து கொண்டிருந்த கடல் நீர் அவர்களது சடலங்களைக் கரையில் வீசியது.

எவ்வாறு இருப்பினும், நான் கூறியதுபோன்று எப்படியோ ஒரு வழியாக முஸ்லிம்கள் தாரைன் சென்றடைந்து விட்டார்கள். அப்போதும் இதேபோன்று கடல் உள்வாங்குதல் மற்றும் அலை எழுதலாக சம்பவம் நிகழ்ந்திருக்கலாம். தாரைன் சென்றடைந்ததும் அங்கு, முஸ்லிம்களுக்கும் மூர்தத் ஆன கிளர்ச்சியாளர்களுக்கும் போர் நடைபெற்றது. அதில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். அதாவது, கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். செய்தி தெரிவிப்பவர் கூட எவரும் எஞ்சவில்லை.

முஸ்லிம்கள் அவர்களின் குடும்பத்தாரை அடிமைகளாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்களது சொத்துக்களைக் கைப்பற்றி விட்டார்கள். குதிரை வீரர் ஒவ்வொருவருக்கும் ஆறாயிரம் போர்ச் செல்வங்கள் கிடைத்தன. முஸ்லிம்கள் கடற்கரையோரமாக அவர்கள் வரை சென்றடைவதிலும் அவர்களோடு போரிடுவதிலும் நாள் முழுவதும் செலவாகிவிட்டது. அங்கு பணியை முடித்ததும் அவர்கள் மீண்டும் திரும்பி வந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் ஸமாமா பின் அஸால் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அலாஃ பின் ஹஸ்ரமி (ரலி) அவர்கள் அங்கேயே தங்க விரும்பிய மக்களைத் தவிர மற்ற மக்கள் அனைவரையும் திரும்ப அழைத்து வந்தார்கள். திரும்பி வந்தவர்களில் ஹஸ்ரத் ஸமாமா பின் அஸால் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். அப்துல்லாஹ் பின் ஹஸ்ஃப் கூறுகிறார்கள்: நாங்கள் பனூ கைஸ் பின் ஸஃலபாவின் ஒரு நீருற்றிற்கு அருகே தங்கியிருந்தோம். மக்களின் பார்வை ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்கள் மீது பட்டது. அவர்கள் ஹதமுடைய

மேலங்கியை அன்னாரது உடலில் கண்டார்கள்.

இது ஹதம் கொல்லப்பட்ட பிறகு, போர்ச் செல்வத்தில் ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதே மேலங்கி தான். அவர்கள் விசாரித்து வருவதற்காக ஒருவரை அனுப்பினார்கள். அதாவது, அந்தக் கோத்திரத்து மக்கள் அனுப்பினார்கள். அந்த நபரிடம், ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்களிடம் சென்று இந்த மேலங்கி அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது என்று விசாரித்து வருமாறு கூறினார்கள். மேலும், ஹதம் பற்றி நீர் தான் அவரைக் கொன்றீரா? என்றும் விசாரித்து வா என்று கூறி அனுப்பினார்கள்.

ஹதம் அந்த மக்களின் தலைவனாக இருந்திருப்பான். அந்த மனிதன் வந்து ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்களிடம் மேலங்கியைப் பற்றி விசாரித்தான். அவர்கள் இது எனக்குப் போர்ச் செல்வத்தில் கிடைத்தது என்று கூறினார்கள். அந்த மனிதன் நீர் தான் ஹதமைக் கொன்றீரா? என்று கேட்டான். ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவனைக் கொல்ல வேண்டும் என்ற ஆசை இருந்ததுதான். ஆனால், நான் கொல்லவில்லை. அந்த மனிதன் இந்த மேலங்கி உம்மிடம் எங்கிருந்து வந்தது என்று கேட்டான். அதற்கு, ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதற்கான பதிலை நான் ஏற்கனவே கூறிவிட்டேன். போர்ச் செல்வத்தில் கிடைத்தது.

ஆக, அந்தக் கோத்திரத்து மனிதன் திரும்பி வந்து தனது நண்பர்களுக்கு இந்த முழு உரையாடலைப் பற்றியும் தகவல் கொடுத்தான். பிறகு, அவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்களிடம் வந்து அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டனர்.

அவர்கள் எல்லாரும் நீர் தான் ஹதமைக் கொன்றீர் என்று கூறினர். ஹஸ்ரத் ஸமாமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள்.

நான் அவனைக் கொல்லவில்லை. ஆயினும், இந்த மேலங்கி எனக்குப் போர்ச் செல்வத்தில் பங்காகக் கிடைத்தது. ஹஸ்ரத் ஸமாமா (ரலி) கூறினார்கள்: மேலங்கி அவனது உடலில் இருக்கவில்லை. மாறாக, அவனது பயண விலங்கிலிருந்தோ அல்லது பொருள்களிலிருந்தோ கிடைத்தது. மக்கள் நீர் பொய் உரைக்கிறீர் என்று கூறி அன்னாரை ஷஹீத் ஆக்கிவிட்டனர்.

பத்தாவது போர்ப் படை பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இது கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட ஹஸ்ரத் ஸுவைத் பின் முக்ரின் அவர்களின் போர்ப் படையாகும்.ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸுவைத் பின முக்ரின் (ரலி) அவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தார்கள். அவர்களுக்கு ஏமனின் பகுதியான திஹாமாவுக்குச் செல்லுமாறு ஆணையிட்டார்கள் அகராதியில் திஹாமா என்பதற்குக் கடுமையான வெப்பம் மற்றும் காற்று நின்று போதல் என்றும் பொருள் உண்டு. இவ்வாறே, அகராதியில் இதற்கு ஒரு பொருள் தாழ்வான பகுதி என்பதுமாகும்.

ஏமனின் மேற்கிலும், தெற்கிலும் செங்கடலின் கரையோரத்தில் தாழ்வான ஒரு நிலப்பரப்புத் தொடர் உள்ளது. அதை திஹாமா என்பர். அந்த நிலப்பரப்பில் மிகவும் தாழ்வான ஆனால், படிப்படியான மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. திஹாமாவின் வடக்கு எல்லை மக்காவுக்கு அருகில் சென்றடைந்தது. தெற்கு எல்லை ஏமனின் தலைநகரமான ஸன்ஆவிலிருந்து சற்றேறக் குறைய 350 மைல் தூரம் வரை சென்று முடிவடைந்தது. திஹாமா ஏமனின் ஒரு மாவட்டமாக இருந்தது. அதில் பல கிராமங்களும் சிற்றூர்களும் இருந்தன. இதுவே, ஏமனின் திஹாமாவைப் பற்றிய அறிமுகமாகும்.

ஹஸ்ரத் ஸுவைத் பின் முக்ரின் (ரலி) அவர்களின் அறிமுகம் பின்வருமாறு: ஹஸ்ரத் ஸுவைத் (ரலி) அவர்களின் தந்தையார் பெயர் முக்ரின் பின் ஆயிஸ். அன்னார் பஸீனா கோத்திரத்தைச் சேர்ந்தவர். அன்னாரது புனைப் பெயர் அபூஅத்தீ. புனைப் பெயர் அபூ அம்ர் என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னார் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அகழ்ப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு, எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அவர்கள் நுஃமான் பின் முக்ரின் (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார்கள். அவர்கள் ஈரானிய வெற்றிகளில் அரும்பெரும் பணிகளை ஆற்றியவர் ஆவார்கள்.

வரலாற்று நூல்களிலிருந்து, ஹஸ்ரத் ஸுவைத் (ரலி) அவர்கள் திஹாமா சென்றது, அங்கு அவர்கள் முர்தத்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பு கிடைக்கவில்லை. ஆயினும், வரலாற்று நூல்களில் திஹாமா வாசிகள் முர்தத் ஆனது மற்றும் கிளர்ச்சி செய்தது ஆகியவற்றின் நிலைமைகளும் சம்பவங்களும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டில், ஹஜ்ஜத்துல் விதாவுக்குப் பிறகு, ஏமனில் ஸகாத் வசூலிப்பவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏமனை ஏழு பகுதிகளாகப் பிரித்திருந்தார்கள். திஹாமாவுக்கு ஆட்சியாளராக தாஹிர் பின் அபூ ஹாலா அவர்களை நியமித்திருந்தார்கள்.

திஹாமாவில் மிகவும் எளிமையான அரபு மக்கள் மட்டுமின்றி இரண்டு பெரிய மற்றும் முக்கியமான கோத்திரங்களும் இருந்தன. ஒன்று, அக் மற்றொன்று அஷ்அர். தபரீ வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது: எல்லாருக்கும் முதலாக, ஹஸ்ரத் அத்தாப் பின் உஸைத் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் பின் அபில் ஆஸ் ஆகியோர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்: எங்கள் பகுதியில் முர்தத்கள், முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்துவிட்டனர்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நான் ஏற்கனவே கூறிவிட்டதுபோன்று, முர்தத்கள் வெறும் முர்தத்களாக மட்டும் இருக்கவில்லை. இந்த மக்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதலும் தொடுத்து வந்தனர். இங்கும் இதே சூழ்நிலை தான் இருந்தது.

எனவே, ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்கள் தமது சகோதரர் ஹஸ்ரத் காலித் பின் உஸைத் (ரலி) அவர்களை திஹாமா மக்களைத் தண்டிப்பதற்காக அனுப்பினார்கள். அங்கு பனூ மத்லஜ் உடைய ஒரு பெரிய கூட்டமும் குஸாஆ மற்றும் கனானாவின் பல்வேறு கூட்டங்களும் பனூ மத்லஜின் குடும்பமான பனூ ஷனூபைச் சேர்ந்த ஜூந்துப் பின் ஸல்மாவின் தலைமையில் முர்தத் ஆகி போருக்காக ஒன்று கூடியிருந்தது.

எதிரிகள் இரு சாராருக்குமிடையில் போர் நடைபெற்றது. ஹஸ்ரத் காலித் பின் உஸைத் (ரலி) அவர்கள், அவர்களைத் தோற்கடித்து சிதறிப் போகச் செய்துவிட்டார்கள். பல மக்களைக் கொன்றுவிட்டார்கள். அதில் எல்லாரையும் விட அதிகமாக பனூ ஷனூப் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு, அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே ஆகி இருந்தது. இந்த சம்பவம் ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களின் பகுதியை முர்தத் ஆகும் குழப்பத்தை விட்டும் தூய்மையாக்கி விட்டது. ஜூந்து தப்பி ஓடிவிட்டான். பிறகு, சில காலங்கள் கழித்து அவன் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணித்திற்குப் பிறகு, திஹாமாவில் எல்லாரையும் விட அதிகமாக, அக் மற்றும் அஷ்அர் கோத்திரங்கள் கிளர்ச்சி செய்தன. அதன் விபரம் பின்வருமாறு: அந்த மக்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்த செய்தி தெரிய வந்தபோது, அவர்களில் பலதரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்தனர். பிறகு, கஸ்ம் கோத்திரத்து மக்களும் அவர்களுடன் சென்று சேர்ந்து கொண்டனர். அவர்கள் கடற்கரை ஓரம் அஃலாப் எனும் இடத்தில் முகாமிட்டனர். தலைவர் இல்லாத சிப்பாய்களும் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர். அஃலாபும் மக்காவின் கரையோரப் பகுதிகளுக்கு நடுவில் உள்ள அக் கோத்திரத்தின் ஒரு பகுதியாகும்.

ஹஸ்ரத் தாஹிர் பின் அபூ ஹாலா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அதைப் பற்றி தகவல் கொடுத்தார்கள். அந்த மக்களைத் தண்டிப்பதற்காகத் தாமே சென்றார்கள். தாம் புறப்பட்ட தகவலையும் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எழுதிவிட்டார்கள். ஹஸ்ரத் தாஹிர் (ரலி) அவர்களுடன் மஸ்ரூக் அக்கீ மற்றும் அக் கோத்திரத்தைச் சேர்ந்த, அவர்களின் சமுதாயத்தில் முர்தத் ஆகாத மக்கள் இருந்தார்கள். எதுவரை என்றால், ஃலாபில் அந்த மக்களுடன் சென்று இணைந்து கொண்டார்கள். அங்கு அவர்களுடன் கடுமையான போர் புரிந்த பிறகு, அல்லாஹ் எதிரிகளுக்குத் தோல்வியை வழங்கினான்.

முஸ்லிம்கள் அவர்களைத் தயக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். வழிகள் முழுவதும் அவர்களில் கொல்லப்பட்டவர்களின் நாற்றம் பரவி விட்டது. முஸ்லிம்களுக்கு ஒரு மகத்துவ மிக்க வெற்றி கிடைத்தது.

திஹாமாவில் முர்தத் ஆன சம்பவங்களை எடுத்துரைத்த வண்ணம், ஓர் எழுத்தாளர் எழுதுகிறார்:

திஹாமாவில் முர்தத் ஆகும் விஷயத்தை கட்டுப்படுத்துவதில் தாஹிர் பின் அபூ ஹாலா அவர்கள் முதலிடத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் (ரலி) தரப்பிலிருந்து அன்னார் (ரலி) திஹாமாவின் பகுதியில் திஹாமாவின் ஆளுநராக இருந்தார்கள்.

அது அக் மற்றும் அஷ்அர் கோத்திரத்தின் தாய் நாடாக இருந்தது. பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அக்காஷா பின் ஸவ்ர் (ரலி) அவர்களுக்கு திஹாமாவில் தங்குமாறும் அதன் வாசிகளைத் தம்மிடம் ஒன்று திரட்டி அவர்களது, அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது ஆணைக்காகக் காத்திருக்குமாறும் கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அக்காஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின்போது, ஹிழ்ர் மௌத் உடைய இரண்டு பகுதிகளான ஸகாஸக் மற்றும் ஸகூனில் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பஜீலா எனும் கோத்திரத்திடம் ஜலீல் பின் அப்தில்லாஹ் பஜலீ அவர்களைத் திருப்பி அனுப்பி அவர்களுக்கு, தமது சமுதாயத்தில் உறுதியாக நிலை நிற்கும் முஸ்லிம்களை உடன் அழைத்துக் கொண்டு இஸ்லாத்தை விட்டு முர்தத் ஆகிவிட்டவர்களுடன் போர் புரியுமாறும், பிறகு கஸ்ம் கோத்திரத்தைச் சென்றடைந்து அவர்களில் முர்தத் ஆனவர்களோடு போர் புரியுமாறும் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

ஜரீர் அவர்கள் தமது பணிக்காகப் புறப்பட்டார்கள். சித்தீகே அக்பர் (ரலி) அவர்கள் என்ன ஆணையிட்டார்களோ? அதை நிறைவேற்றினார்கள். சில மக்களைத் தவிர எவரும் அவர்களை எதிர்கொள்ள முன்வரவில்லை. அன்னார் (ரலி) அவர்களைக் கொன்று சிதறடித்துவிட்டார்கள்.

இந்தப் போர்படைகள் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருக்கிறது. இனி பதினொன்றாவது போர்ப் படை பற்றிக் கூறப்படும். இன்ஷாஅல்லாஹ்.

இப்பொழுது நான் சில மார்ஹூம்களைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். அவர்களில் இருவர் புர்கினோ ஃபாஸோவைச் சேர்ந்த நமது இளைஞர்கள் ஆவார்கள். ஜூன் 11 அன்று மாலை இவர்களது பகுதியான டோரீயின் மண்டலத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இவர்கள் இருந்தபோது, இவர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் தொடுத்தனர். அங்கு பல மக்கள் கொல்லப்பட்டனர். அதில் நமது இந்த இரண்டு அஹ்மதி காதிம்களும் ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

இவர்கள் தமது கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தது. சம்பவ இடத்திலேயே ஷஹீத் ஆகிவிட்டனர்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களில் ஒருவர் பெயர் டேக்கூ ஸகரிய்யா ஆகும். வயது 32. அவர்களுக்கு டோரீ மண்டலத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மண்டல காயித் ஆகத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. கானாவின் மத்ரஸத்துல் ஹிஃப்ஸில் திருக்குர்ஆன் மனனம் செய்வதற்காகவும் சென்றார்கள். சில காலம் மனனம் செய்து விட்டுத் திரும்பி வந்துவிட்டார்கள்.

ஜமாஅத் பணிகளுக்காக எப்பொழுதும் ஆஜராக தயாராக இருப்பார்கள். எல்லாப் பணிகளுக்காகவும் லெப்பைக் கூறியவாறு தம்மை அர்ப்பணித்து வந்தார்கள்.

ஐவேளை தொழுகைகளை முறையாகப் பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் மற்றும் நஃபில்களையும் முறையாக நிறைவேற்றுபவராக இருந்தார்கள். தமது சந்தாக்களையும்

முறையாக செலுத்துபவராக இருந்தார்கள். மாதாந்திர வருமானம் போகவும் ஏதாவது கூடுதல் வருமானம் வந்தால், உடனடியாக அதற்கும் சந்தா செலுத்தி விடுவார்கள். ஜமாஅத் மற்றும் கிலாஃபத் மீது உண்மையான அன்பு இருந்தது. முறையாக ஜுமுஆ பேருரை கேட்டு வந்தார்கள். MTA - ன் இதர நிகழ்ச்சிகளையும் மிகவும் ஆர்வத்துடன் பார்த்து வந்தார்கள்.

இவர்களின் உள்ளூர் மிஷனரீ கூறுகிறார்கள்: அவர்களுடனான கடைசி சந்திப்பில் இவர்கள் கூறினார்கள்: காலத்தின் கலீஃபா அவர்களை சந்திக்கும் நற்பேறு எப்போது கிடைக்கும்! என்று கலீஃபாவை சந்திப்பதற்கு அவர்களுக்கு அதிக ஆசை இருந்தது.

முஅல்லிம் சாஹிப் எழுதுகிறார்: முன்னுதாரணமான ஒரு காதிமாகத் திகழ்ந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், இவர்களின் துணைவியார் ஒருவரும் இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர்.

இரண்டாவது ஷஹீத் டேக்கூ மூஸா சாஹிப் ஆவார்கள். அன்னாருக்கு வயது 34. அன்னார் அப்போது தமது மஜ்லிஸ் சாயீ திங்காவில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆக இருந்தார்கள். தமது ஜமாஅத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் எல்லாரையும் விட அதிகமாகப் பங்கு பெறுவார்கள். மற்றவர்களையும் கலந்து கொள்ளச் செய்வார்கள். தொழுகைகளையும் சந்தா செலுத்துவதையும் முறையாகக் கடைபிடித்து வந்தார்கள். அன்னாருடைய ஜமாஅத்தில் பள்ளிவாசல் இருக்கவில்லை. முறையாகத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக, உள்ளூர் அளவில் ஒரு ஷெட்டை அங்கு அமைப்பதற்கு அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள்.

ஷஹீத் மர்ஹூம் எனக்குத் தொடர்ச்சியாகக் கடிதங்களும் எழுதி வந்தார்கள். தலைமையகத்திலிருந்து சுற்றுப் பயணம் செய்வதற்காக யார் சென்றாலும், அவருக்கு விருந்தோம்பல் செய்வார்கள். தாமும் உடன் இருந்து பணி செய்ய வைப்பார்கள். மற்றவர்களுடன் கலந்து கொள்ளுவார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், அன்னாரின் இரண்டு மனைவிமார்களும் 3 மகள்களும் உள்ளனர். அல்லாஹ் அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

இந்த இரண்டு ஷஹீத்களைப் பற்றியும் அங்குள்ள அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்: இந்த காதிம்கள் இருவரும் நமது உள்ளூர் மிஷனரீ டேக்கூ அஹ்மது போரீமா சாஹிப் அவர்களின் சகோதரர்கள் ஆவார்கள். அவர்கள் தற்போது அஹ்மதிய்யா ரேடியோவின் இன்சார்ஜ் ஆக இருக்கிறார்கள். அவர்களுடைய சகோதரர்கள் ஆவார்கள்.

அவர்களின் குடும்பத்தில் அஹ்மதியத் அன்னாரின் தந்தையார் இப்ராஹீம் ஹூந்தீ சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் மிகவும் கலப்பற்ற மற்றும் உத்வேகம் கொண்ட, இறைவன் பால் அழைப்பவராக இருந்தார்கள். அன்னார் டோரீ மண்டலத்தில் அன்ஸாருல்லாஹ் ஸயீமாகவும் இருந்துள்ளார்கள். 2011இல் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

அடுத்து, அமீர் சாஹிப் மேற்கொண்டு துஆவிற்காகவும் எழுதுகிறார்கள்: புர்கீனோ ஃபாஸோவில் 2015 லிருந்து பயங்கரவாத தாக்குதல்கள் நடக்கின்றன. நாட்டின் வடக்குப் பகுதியில் அதிகம் நாசம் விளைவிக்கப்படுகிறது. 2 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

அல்லாஹ் அவர்களுக்கும் அமைதிக்கான சூழலை உருவாக்குவானாக. உலகின் பொருளாதார மற்றும் அரசியல் நிலைகள் இப்போது சீர்கெட்டு வருகின்றன. இந்தப் பயங்கரவாதத்திற்கான சாத்தியங்கள் இன்னும் அதிகமாகின்றன. அல்லாஹ் மனித குலத்தின் மீது கருணை புரிவானாக. அவர்களுக்கு அறிவை வழங்குவானாக.

இரண்டாவது குறிப்பு உமர் பூர் சிந்து மாவட்டத்தின் சாதிக்பூர் எனும் ஊரைச் சேர்ந்த நூரம் கான் சாஹிப் அவர்களின் மகன் பலோச்சீ முஹம்மது யூஸுஃப் சாஹிப் அவர்களுடையது ஆகும். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் டேரா காஸீ கானைச் சேர்ந்த பலோச்சீ ஆவார்கள். அங்கு பிறந்தார்கள். 1934-ல் ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜ்கீ சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதியத் வந்தது. பாகிஸ்தான் உருவான பிறகு, அன்னார் ஹிஜ்ரத் செய்து உமர்கோட்டின் சாதிக்பூரில் தஹ்ரீகே ஜதீத் உடைய நிலங்களில் வந்துவிட்டார்கள். பிறகு, அவர்கள் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் ரப்வாவிலும் வசித்திருந்தார்கள். அந்த முஹல்லாவில் அன்னாருக்கு மோதினாராகத் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள்.

பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி, 7 மகன்களும், 4 மகள்களும் உள்ளனர். அன்னாரின் ஒரு மகன் ஷபீர் அஹ்மத் சாஹிப் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். இன்றைய நாட்களில் ஐவரி கோஸ்டில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு பெறுகிறார்கள். செயல் களத்தில் இருப்பதன் காரணத்தால், இவர்களால் தமது தந்தையாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. மர்ஹூம் அவர்களின் இரண்டு மகன் வழிப் பேரர்களும் கூட இயக்கத்தின் முரப்பி ஆவார்கள்.

அன்னாரின் மகன் ஷபீர் சாஹிப் இயக்கத்தின் முரப்பி எழுதுகிறார்கள்:

பல நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். நாங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே அன்னார் முறையாக தஹஜ்ஜுத் தொழுது வருவதைக் கண்டிருக்கிறோம். தினமும் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, உரத்த குரலில் திலாவத் செய்து வந்தார்கள். கிலாஃபத் மீது அளவு கடந்த அன்பு செலுத்தக்கூடியவராக இருந்தார்கள். மகன் கூறுகிறார்: நான் வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம், என்னை அழைத்துக் கூறுவார்கள். எனது இரண்டு விஷயங்களை எப்போதும் நினைவிற்கொள்ளுங்கள். எப்போதும் கிலாஃபத்தோடு நன்றியுடன் நடந்து கொள்ள வேண்டும். உங்களுடைய வக்ஃப்க்கான உரிமையை செலுத்த வேண்டும்.

மிகவும் அதிகமாக விருந்தோம்பல் செய்யக் கூடியவராகவும் இருந்தார்கள். வழியில் செல்லும் மக்களை வீட்டிற்கு அழைத்து வருவார்கள். அவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காகவும் ஜமாஅத் அல்லாத மக்கள் பலர், இந்துக்கள் போன்ற அனைவரும் வந்திருந்தனர். மிகவும் நல்ல சொற்களில் அன்னாரை நினைவுகூர்ந்தார்கள். மேலும், எங்களுடைய தந்தையார் மரணித்துவிட்டார் என்றும் அவர்கள் கூறினர். ஏனெனில், அன்னார் ஏழைகளுக்கு அதிகமாக உதவி

வந்தார்கள்.

மூன்றாவது குறிப்பு அன்பிற்குரிய வாகிஃபா நவ் முபாரிஸா ஃபாரூக் அவர்களுடையது. ரப்வாவைச் சேர்ந்தவர். ஃபாரூக் அஹ்மது சாஹிப் அவர்களின் மகளாவார்கள். அன்னாரும் கடந்த நாள்களில் மரணித்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அந்தப் பெண் பிள்ளை 11 வயதுடையவராக இருக்கும்போது, உயர் அழுத்த மின்சார கம்பியைத் தொட்டதன் விளைவாக அவரின் இரண்டு கைகளும் வெட்ட வேண்டியது ஏற்பட்டது. ஆனால், அந்த நிலையிலும் அந்தப் பெண் துணிவை இழக்கவில்லை. தமது கல்வியைத் தொடர்ந்தார். முதலில் அவர் வாயால் பேனாவைப் பிடித்து எழுதுவதற்குப் பயிற்சி மேற்கொண்டார். பிறகு, இரண்டு கை முட்டிகளை இணைத்து எழுதுவதற்கு பயிற்சி செய்தார். இவ்வாறு, சில மாதங்களிலேயே மிகவும் அழகாக எழுத ஆரம்பித்துவிட்டார். கல்வியையும் தொடர்ந்தார்.

சில காலத்திற்குப் பிறகு, இந்தக் குடும்பம் ரப்வாவிற்கு இடம் பெயர்ந்து விட்டது. இங்கும் தனது கல்வியைத் தொடர்ந்தார். 2013-ல் நல்ல மதிப்பெண்கள் பெற்று B.A தேர்ச்சி பெற்றுவிட்டார். பிறகு, தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் M.A அரபியும் முடித்தார். வாகிஃபா நவ் என்ற வகையில் இவர் TAHIR HEART INSTITUTE -லும் சில காலம் தொண்டாற்றினார். நல்ல உச்சரிப்புடனும்,சொற் பொருளுடனும் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொண்டார். எப்போதும் நூறு சதவீதம் மதிப்பெண் பெற்று வந்தார்.முஹல்லாவில் தர்ஜுமத்துல் குர்ஆன் வகுப்பும் நடத்திவந்தார்.

அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில், பெற்றோர் மட்டுமின்றி 2 சகோதரர்களும், 2 சகோதரிகளும் உள்ளனர். அல்லாஹ் அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்கி, கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பெற்றோருக்கும் பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய அன்ஸூமானஹ் பதாரா சாஹிப் அவர்களுடையது. அன்னார் ஐவரிகோஸ்டில் மாஸாதாகோ பகுதியில் இயக்கத்தின் முஅல்லிமாக இருந்தார்கள். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அங்குள்ள மிஷனரீ இன்சார்ஜ் சாஹிப் எழுதுகிறார்கள்: மர்ஹூம் நோன்பைப் பேணக்கூடியவராகவும் பணிவிணக்கமுடையவராகவும் அதிகமாக துஆ செய்யக்கூடியவராகவும், நல்ல ஒழுக்கமான இயல்புடைய சான்றோராகவும் இருந்தார்கள். அதிகமாக நஃபில்களை நிறைவேற்றி வந்தார்கள்.

திங்கட்கிழமை அன்றும் வியாழக்கிழமை அன்றும் முறையாக நஃபில் நோன்பு வைத்து வந்தார்கள். அன்னாரின் துஆக்களும் அதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தன. அன்னாருக்கு கிலாஃபத் மீது ஓர் அளப்பெரிய நேசம் இருந்தது.ஒரு சிறந்த முபெல்லிக் ஆக இருந்தார்கள்.

அன்னார் 1997-ல் கனவின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் கனவில் கண்டார்கள். ஒரு காட்டில் இருக்கிறார்கள். அங்கிருந்து ஓர் இடம் இருக்கிறது. நாஸியான் என்ற ஒரு கிராமம் இருந்தது. அங்கு சென்று கொண்டிருக்கிறார்கள். ஒரு வாளைக் கொண்டு அங்கே செல்வதற்கான பாதையை அமைக்கிறார்கள். அத்துடன் உரத்த குரலில் கலிமா தய்யிபாவைக் கூறிக் கொண்டே செல்கிறார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

இந்தக் கனவுக்குப் பிறகு ஒரு நாள், ஓர் அஹ்மதி மிஷனரீ உமர் முஆஸ் சாஹிப் அவர்கள் தப்லீக் செய்வதற்காக நாஸியான் வந்துள்ளார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது.

ஆக, அன்னாரும் நாஸியான் சென்றார்கள். ஜமாஅத்தின் தூதுச் செய்தியைக் கேட்டதுமே பைஅத் செய்துவிட்டார்கள். இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ளுமாறே அல்லாஹ் எனக்குக் கனவில் கூறினான். மேலும், எனக்கு மார்க்கம் கிடைக்கும் அந்தக் கிராமத்திற்கு முயற்சி செய்து செல்ல வேண்டும் என்றும் கூறினான் எனக் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சில காலத்திற்குப் பிறகு அன்னார் இயக்கத்தின் முஅல்லிமாக முறையாக வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்ற ஆரம்பித்தார்கள். 2022-ல் நாட்டில் உட்பூசல்கள் ஆரம்பித்த போது, அன்னாருடைய இடத்திலிருந்து தலைமையகத்துடனான தொடர்பு நிலைபெற்றிருக்க முடியவில்லை. முஅல்லிம் சாஹிப் அவர்கள் கிராமங்கள் மற்றும் அக்கம் பக்கத்து ஜமாஅத்களில் தமது தொடர்பை நிலைபெறச் செய்தார்கள். எந்நிலையிலும் ஜமாஅத் மக்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத் பணிகளைத் தொடர்ந்து வந்தார்கள்.

இவ்வாறு அன்னார் தமது கிராமத்தில் தமது வீட்டில், முற்றத்தில் ஒரு பள்ளிவாசலையும் கட்டினார்கள். அங்கிருந்தே மக்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்திற்கான பணிகளையும் மேற்கொண்டு வந்தார்கள். இவ்வாறு தேசிய அளவில் எல்லா ஜமாஅத் நிகழ்ச்சிகளிலும் முறையாக, நீண்ட பயணம் மேற்கொண்டு கலந்து கொண்டு வந்தார்கள். 1998-ல் அன்னாருக்கு யூகேவின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அன்னாருக்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களைச் சந்திக்கும் கண்ணியம் கிடைக்கப் பெற்றது. ஹுஸூர் (ரஹி) அவர்களுடன் ஃபிரஞ்சு முலாகாத் எனும் mta நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்த சந்திப்பினால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்.

மக்களிடம், இந்த சந்திப்புகள் என்னுடைய வாழ்வின் மிகவும் அழகான அங்கமாகும். அதை என்னால் எடுத்துரைக்க முடியாது என்று அன்னார் கூறி வந்தார்கள். 2004-ல் நான் புர்கீனோ ஃபாஸோவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, அங்கு அன்னார் என்னைச் சந்தித்தார்கள். அன்னார் என்னிடம் கூறினார்கள்:

நான் எனது புதிய ஒரு வாழ்வின் காரணமாக, தங்களைச் சந்தித்தேன். தங்களது சுற்றுப் பயணம் காரணமாக, அல்லாஹ் என் மீது அருள் புரிந்துள்ளான். இந்த பரக்கத் எனக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

கூறினார்கள்: இரண்டு மாதங்களுக்கு முன்னால் நான் கடுமையாக நோய்வாய்ப்பட்டேன். எதுவரை என்றால், என்னுடைய கடைசி நேரம் வந்துவிட்டதாக வீட்டில் உள்ளவர்கள் நினைத்துவிட்டார்கள். அன்னார் கூறுகிறார்கள்: அப்போது நான் கனவில் கண்டேன்.

அன்னார் என்னைக் கனவில் கண்டார்கள். நான் அன்னாரது தலையில் கையால் தடவுகிறேன். அப்போது அன்னார் கூறுகிறார்கள்:

கனவிலேயே நோய் அனைத்தும்

உடலை விட்டு விலகிவிட்டதை நான் உணர்கிறேன். கூறுகிறார்கள்: நான் கண் விழித்தபோது, உண்மையிலேயே நோய் குணமாகியிருந்தது. நான் உடல் நலம் அடைந்திருந்தேன்.

எவ்வாறு இருப்பினும், நான் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, நான் கண்ட கனவை செயல் வடிவிலும் நிறைவேற்றிவிடுங்கள். எனது தலையை கையால் தடவுங்கள் என்று கூறி தலையை முன்னால் கொண்டு வந்தார்கள். மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். கிலாஃபத்துடன் முழுமையான நன்றியுணர்விற்கான தொடர்பு இருந்தது. நான் மார்க்கத் தொண்டாற்றுவதற்காகவே இந்த வாழ்வு எனக்கு கிடைத்துள்ளது. இப்போது நான் இந்தப் பணியிலேயே எனது வாழ்வைக் கழிப்பேன் என்று மக்களிடம் கூறிவந்தார்கள். இந்த வாக்குறுதியை அன்னார் நிறைவேற்றவும் செய்தார்கள்.

94 வயதை அடைந்திருந்தார்கள். ஆயுளின் இறுதி வரை சுறுசுறுப்பானவராகவும், ஆரோக்கியமானவராகவும் இருந்தார்கள். வயது முதுமை இருந்தபோதிலும், தாமே அக்கம் பக்கத்து ஜமாஅத்களில் சுற்றுப் பயணமும் மேற்கொண்டு வந்தார்கள். 2008-ல் அன்னார் இரண்டாவது முறையாக என்னை சந்தித்தார்கள். நான் கானா சென்றபோது, அங்கு அன்னார் வந்தார்கள். கானாவில் ஜுபிலீ மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

மிஷனரீ பந்தூக்கோ ஷாஹித் சாஹிப் கூறுகிறார்கள்: பாகிஸ்தான் முபல்லிக் மார்களுடன் மிகவும் அன்பான தொடர்பு இருந்தது. மிகவும் பணிவுடனும் தன்னடக்கத்துடனும், சந்தித்து வந்தார்கள். மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். பொருள் தியாகத்திலும் எப்போதும் முன்னணியில் இருப்பார்கள். முறையாக சந்தா செலுத்தி வந்தார்கள். மிஷனரீ கூறுகிறார்கள்:

இந்த ஆண்டு ஜனவரி கடைசியில், நான் அன்னாரின் கிராமத்திற்குச் சுற்றுப் பயணம் சென்றபோது முஅல்லிம் சாஹிப் என்னிடம் இந்த ஆண்டு நான் சென்றுவிடுவேன் என்று கூறினார்கள். நான் அன்னாரிடம் எங்காவது பயணம் போகின்றீர்களா? என்று கேட்டேன். அப்போது, இல்லை நான் இந்த உலகத்தை விட்டுச் சென்றுவிடுவேன். ஏனென்றால், இந்த ஆண்டு நான் மிக்க மகிழ்ச்சியாக உள்ளேன் என்று கூறினார்கள். முபல்லிக் கூறுகிறார்கள்:

இதற்குப் பிறகு, அன்னார் கூறினார்கள்: நான் வாழ்நாள் முழுவதும் அல்லாஹ்வுக்காகப் பணியாற்றினேன். (அல்லாஹ்வின் மீது மிக உறுதியான நம்பிக்கை இருந்தது.) நான் இப்போது உனது ஊதியத்தைப் பெறுவதற்காக அல்லாஹ்விடம் செல்கிறேன். மரணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அன்னார் தமது குடும்பத்தாரிடம், எனக்கு இப்போது அல்லாஹ்வுடன் ஒரு வாரத்திற்கான கான்ட்ராக்ட் இருக்கிறது. ஒரு வாரம் பாக்கி உள்ளது என்று கூறினார்கள்.

அடுத்த ஜுமுஆ அன்று, அதாவது ஒரு வாரத்திற்குப் பிறகு காலையில் வழக்கம்போல் தஹஜ்ஜுத் தொழுகைக்காக அன்னார் எழுந்தார்கள். வுளு செய்தார்கள். வுளுவை முழுமை தான் செய்திருப்பார்கள். வுளு செய்துகொண்டிருக்கும்போதே அங்கேயே அதே இடத்தில் அன்னாருக்கு மயக்கம் வந்தது. தமது உண்மையான படைப்பாளனைச் சென்றடைந்தார்கள்.

ஆக, இது போன்ற தன்னலமற்ற கலப்பற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வால் நிறைந்த மக்களை அதுவும் மிகவும் தொலை தூரத்தில் வசிக்கக் கூடிய மக்கள் ஆவார்கள். அன்னாரை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியிருக்கின்றான். அந்த மக்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை முழு உலகிலும் பரப்புகிறார்கள்.

இது போன்ற தன்னலமற்றவர்களை அல்லாஹ் எப்போதும் ஜமாஅத்துக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக. அவர்கள் தொண்டாற்றக் கூடியவர்களாகவும் இருப்பார்களாக.

மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில் அன்னாரின் 5 மகன்களும், 6 மகள்களும் உள்ளனர். அல்லாஹ்வின் அருளால் அனைவரும் அஹ்மதிய்யத்தில் நிலை பெற்றிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு உறுதியான பாதத்தையும் வழங்குவானாக. அவர்கள் தமது தந்தையாரின் அடிச்சுவட்டில் செல்லக் கூடியவர்களாக இருப்பார்களாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, நான் இந்த அனைத்து மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். (இன்ஷாஅல்லாஹ்)

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முக்னீ

*****

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத்
மர்கஸியா, காதியான்)

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா,
பாரத்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜுன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி.......

அவர்கள் உள்ளத்தால் அவர்கள் கூறுகிறார்களா? அல்லது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கூறுகிறார்களா? என்று ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள், ஆராய்ந்தபோது, அவர்கள் கூறியது போன்றுதான் விவகாரம் இருந்தது. அதாவது, அவர்கள் உண்மையிலேயே சரியாகத் தான் கூறுகிறார்கள் என்பது தெரிய வந்தது. அவர்களில் பொதுமக்கள் இஸ்லாத்தில் உறுதியாக நிலைநின்றார்கள். ஆயினும், அவர்களின் பெரியவர்கள் முர்தத் ஆகியிருந்தனர். ஓடிவிட்டனர். இவ்வாறு, நகா மற்றும் ஹமீர் கோத்திரங்களை மார்க்கத்தை விட்டு விலகிவிட்டனர் என்ற பழியிலிருந்து ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள், அந்த மக்களை குற்றமற்றவர்களாக ஆக்கிவிட்டார்கள். அவர்கள் அந்த மக்களை ஒன்றுதிரட்டுவதற்காக அங்கேயே தங்கி இருந்தார்கள். அபீன் எனும் இடத்தில் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் தங்கி இருந்ததால், அஸ்வத் அன்ஸீயின் எஞ்சியிருந்த கூட்டத்தின் மீதும் ஆழ்ந்த தாக்கம் ஏற்பட்டது. அதை கைஸ் பின் மஸூஹ் மற்றும் அம்ர் பின் மஃதீ கர்ப் ஆகியோர் வழிநடத்திக் கொண்டிருந்தனர்.

ஸன்ஆவிலிருந்து தப்பி ஓடிய பிறகு,கைஸ் ஸன்ஆவுக்கு அருகிலேயே சுற்றி வந்தான். மேலும், அம்ர் பின் மஃதீ கர்ப் லஹ்ஜில் இருந்த அஸ்வத் அன்ஸீயின் கூட்டத்தில் இணைந்து கொண்டிருந்தான். ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அபீனை சென்றடைந்ததும் அவர்கள் இருவரும், அதாவது கைஸ் மற்றும் அம்ர் பின் மஃதீ கர்ப் ஆகிய இருவரும் அவர்களோடு போர் புரிய ஒன்று கூடிவிட்டனர். போர் புரிய ஆயத்தமாகிவிட்டனர். ஆனால், விரைவிலேயே இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒருவர் மற்றவரை விட்டுப் பிரிந்துவிட்டனர். இவ்வாறு, கிழக்கு திசை வழியாக அமைந்த ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் வருகை லஹ்ஜில் இருந்த முர்தத்களின் கூட்டத்துக்கு முடிவு கட்டிவிட்டது.

குந்தா எனும் கோத்திரமும் ஏமனுடனேயே இருந்தது. அது ஹிஸ்ர் மௌத் பகுதியில் இருந்தது. அந்தப் பகுதியில் பணியாளராக ஸியாத் பின் லபீத் இருந்தார்கள். அன்னார் ஸகாத் தொடர்பாக கண்டிப்பு காட்டியபோது, அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி உருவாகிவிட்டது. எனவே, ஹஸ்ரத் இக்ரிமா மற்றும் ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமையா ஆகிய இருவரும் அவர்களுக்கு உதவி செய்வதற்காக சென்றடைந்தார்கள். அதன் விளக்கம் ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமைய்யா அவர்களின் குறிப்பில் எடுத்துரைக்கப்படும்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் முர்தத்களுடன் போர்கள் புரிந்து முடித்த பிறகு, மதீனா திரும்புவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். அப்போது, அவர்களுடன் நுஃமான் பின் ஜூன் உடைய மகளும் இருந்தார். அவளுடன் அவர்கள் போர்க் களத்தில் திருமணம் செய்து கொண்டிருந்தார்கள்.

இதற்கு முன்னர், உம்மூ தமீம் மற்றும் முஜாஆவின் மகளுடன் திருமணம் செய்து கொண்டிருந்ததன் காரணமாக ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் மீது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கடுமையாக கோபம் அடைந்தார்கள் என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். அதைப் பற்றி முந்தைய குத்பாவில் விளக்கமாக கூறப்பட்டுவிட்டது.

ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அவ்வாறு இருந்தும் அவரை மணந்து கொண்டார்கள். இதனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் படையைச் சேர்ந்த பல மக்கள் அவர்களை விட்டு விலகிவிட்டார்கள். இந்த விவகாரம் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு முன் எடுத்து வைக்கப்பட்டது. ஆனால், அவர்களாலும் எந்தத் தீர்ப்பும் வழங்க முடியவில்லை. இந்த நிலைமைகள் அனைத்தும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு எழுதி அவர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்:

இக்ரிமா திருமணம் செய்து பொருத்தமற்ற செயல் ஒன்றும் செய்துவிடவில்லை. சிலரது பார்வையில் கோபம் இருந்தது. பின்னர் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டுவிட்டது. ஆனால், சில மக்களின் கோபத்தின் பின்னணி இதுவாக இருந்தது. அதாவது நுஃமான் பின் ஜூன் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜராகி, தாங்கள் (ஸல்) எனது மகளை திருமண பந்தத்தில் ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணப்பித்தார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மறுத்துவிட்டார்கள். மேலும், அவரது மகளை அவரது தந்தையுடனேயே திருப்பி அனுப்பி வைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை நிராகரித்திருந்தார்கள். எனவே இக்ரிமா அவர்களின் படையின் ஒரு பகுதியினர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றிய வண்ணம், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் அந்தப் பெண்ணை திருமணம் செய்திருக்கக் கூடாது என்று நினைத்தனர்.

ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த ஆதாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அது முற்றிலும் தவறாகும் என்று கூறி, ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் திருமணத்தை ஆகுமானதாகக் கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் தமது மனைவியுடன் மதீனாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். அவர்களிடம் கோபித்துக் கொண்டு விலகிச் சென்றிருந்த படையின் அந்தப் பகுதியும் மீண்டும் அவர்களுடன் வந்து இணைந்தது.

எந்தப் பெண்ணைப் பற்றி கூறப்படுகிறதோ, அஸ்மா பினத் நுஃமான் பின் ஜூன், அதாவது ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் எந்தப் பெண்ணோடு திருமணம் செய்தார்களோ அவரைப் பற்றி புகாரி மற்றும் இதர ஹதீஸ் நூல்களில் அறிவிப்புகள் உள்ளன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் திருமணம் நடந்தது. ஆயினும், ருக்ஸத்தானாவுக்கு முன்னரே அவள் எத்தகைய ஒரு செயலை செய்தாள் என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அவளது கோத்திரத்துக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

அந்தப் பெண்ணுடைய பெயர் உட்பட சம்பவங்களில் பல கருத்துவேறுபாடுகள் உள்ளன. சிலர் அந்தப் பெண்ணுக்கு ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமைய்யா (ரலி) அவர்களுடன் திருமணம் நடந்ததாகக் கூறியுள்ளனர். எவ்வாறு இருப்பினும்,

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 04 August 2022 Issue No. 31

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்த சம்பவங்களுக்கு விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

அரேபியா வெற்றிக் கொள்ளப்பட்டு இஸ்லாம் பரவ ஆரம்பித்த போது, குந்தா கோத்திரத்தின் ஒரு பெண், அவள் பெயர் அஸ்மா அல்லது உமீமா என்று இருந்தது. அவள் ஜூனியா என்றோ பின்துல் ஜூன் என்றோ அழைக்கப்பட்டு வந்தாள். அவளது சகோதரர் லுக்மான் தனது சமுதாயம் சார்பாக பிரதிநிதியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையில் ஆஜரானார். அந்த சந்தர்ப்பத்தில் அவன் தனது சகோதரியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் எண்ணினார்.

மேலும், நேரடியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபு கோத்திரங்களின் ஒற்றுமையை விரும்பினார்கள் என்பதால் அன்னார் (ஸல்) அவரது அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், 12.5 அவ்கியா வெள்ளியில் நிக்காஹ் ஓதவேண்டும் என்று கூறினார்கள். இதைவிட அதிகமாக நான் எனது எந்த மனைவிக்கோ அல்லது மகளுக்கோ நிர்ணயிக்கவில்லை என்றும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஏற்றுக் கொண்டபோது, நிக்காஹ் நடத்தப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் யாராவது ஒரு நபரை அனுப்பி தங்களது மனைவியை வரவழைத்துக் கொள்ளுங்கள் என்று அவர், கேட்டுக் கொண்டார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அபூ உஸைதை அந்தப் பணிக்காக நியமித்தார்கள். அன்னார் அங்கு சென்றார்கள். ஜூனியா அன்னாரைத் தமது வீட்டிற்கு அழைத்தார். அப்போது ஹஸ்ரத் அபூ உஸைத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்குப் பர்தாவிற்கான கட்டளை இறங்கிவிட்டது. இதைக் கேட்ட அந்தப் பெண் மற்ற வழிகாட்டல்களைக் கேட்டாள். அதை அன்னார் (ரலி) கூறிவிட்டார்கள். மேலும், ஒட்டகத்தில் அவரை அமர்த்தி மதீனா அழைத்து வந்தார்கள்.

பேரீத்தம் மரங்கள் சுற்றியிருந்த ஒரு வீட்டிற்கு கொண்டு வந்து இறக்கினார்கள். அவளது உறவினர்கள் அவளது செவிலியையும் உடன் அனுப்பியிருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

எவ்வாறு நம் நாட்டிலும் கூட செல்வந்தர்கள் பெண்ணுக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படக் கூடாது என்பதற்காக மக்களோடு நெருங்கிப் பழகும் பணியாள் ஒருவரையும் உடன் அனுப்புவது உண்டோ அதே போன்று செய்தார்கள்.

இந்தப் பெண் அழகுக்குப் பேர் போயிருந்தாள். சாதாரணமாகவே பெண்களுக்கு மணமகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். மதீனத்துப் பெண்கள் அவளைப் பார்க்கச் சென்றார்கள். அந்தப் பெண்ணின் கூற்றிற்கிணங்க யாரோ அந்தப் பெண்ணுக்கு இவ்வாறு கற்றுக் கொடுத்து விட்டார்கள். அதாவது, முதல் நாளே மதிப்பச்சத்தை ஏற்படுத்த வேண்டும். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உன்னிடம் வரும்போது நான் தங்களிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறி விடு. இதனால் அன்னார் உனக்கு மிகவும் அதிகம் நெருக்கம் ஆகிவிடுவார்கள்.

ஒருவேளை இந்தக் கூற்று யாருடைய திருமணம் நடந்திருந்ததோ அந்தப் பெண்ணால் சித்தரிக்கப்பட்டதில்லை என்றாலும் கூட வியப்பிற்குரியது ஒன்றும் இல்லை. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

யாராவது ஒரு நயவஞ்சகன் தனது மனைவியின் மூலமாகவோ அல்லது வேறு யாரோ ஓர் உறவினரான பெண்ணின் மூலமாகவோ இதுபோன்ற வாசகத்தை கூறவைத்துவிடு என்று அந்தத் தீமையை செய்திருக்கலாம். எனவே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆக, அந்தப் பெண் வந்திருக்கும் தகவல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது, அவளுக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்த வீட்டிற்குச் சென்றார்கள். ஹதீஸ்களில் எழுதப்பட்டுள்ளது. அதன் மொழியாக்கம் இதுவாகும்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவளிடம் வருகை தந்தபோது உன்னை எனக்கு அன்பளிப்பாக்கி விடுவாயாக என்று அன்னார் (ஸல்) அவர்கள், அவளிடம் கூறினார்கள். அதற்கு அவள் அரசியும் கூட தன்னை சாதாரண மனிதர்களுக்கு அர்ப்பணிப்பது உண்டோ? என்று கேட்டாள். நவூதுபில்லாஹ். தன்னைப் பெரியவளாகக் காட்டிக் கொண்டாள்.

ஹஸ்ரத் அபூ உஸைது (ரலி) கூறுகிறார்கள்: இதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஒருவேளை அந்நியம் காரணமாக பதற்றமடைகிறாள் போல என்று அவளுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அவள் மீது தமது கையை வைத்தார்கள். அன்னார் தமது கைகளைத்தான் வைத்திருப்பார்கள். அதற்குள் அவள் மிகவும் அசுத்தமான, அறிவுக்கு புறம்பான இந்த வரியைக் கூறிவிட்டாள். அதாவது உம்மிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

ஒரு நபி அல்லாஹ்வின் பெயரைக் கேட்டதும் ஆன்மாவில் பணிவால் நிறைந்து விடுவார். மேலும், அவனது மகிமையில் திளைத்து மூழ்கிவிடுவார்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad